**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2020**

**C021 இலக்கணம் – 1 (எழுத்து)**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. முதல் எழுத்துகள் யாவை?
2. சுட்டு எழுத்துகள் யாவை?
3. உயிரளபெடை எத்தனை மாத்திரை பெறும்?
4. நன்னூலில் ஆவி என்னும் சொல் உணர்த்துவது யாது?
5. நன்னூலார் கூறும் விகுதிகள் எத்தனை?
6. பூ+கொடி – புணர்ச்சியில் எவ்வாறு சேர்ந்து வரும்?
7. மக்கட்பண்பு – பிரித்துக் காட்டுக.
8. பூப்பெயர் முன்னர் வல்லினம் பொதுவிதிப்படி எவ்வாறு புணரும்?
9. குளம் முன் வரும் கரை என்னும் சொல் எவ்வாறு புணரும்?
10. நன்னூலார் குறிப்பிடும் பொதுச்சாரியைகள் எத்தனை?
11. செய்யுள் விகாரங்கள் உலக வழக்கில் வருமா?
12. தமிழ் இலக்கண நுலார் குறிப்பிடும் உடம்படுமெய்கள் யாவை?
13. எண்ணுப்பெயர்களில் முற்றியலுகர ஈற்றில் அமைந்தது எது?

14. மகர மெய் ஈற்றுச் சொற்கள், ஈற்று மெய் கெட்டு வருமொழியில் உள்ள உயிரோடு எவ்வாறு புணரும்?

15. குறிப்பு வினையெச்சத்தை மொழியியலார் எவ்வாறு குறிப்பிடுவர்?

**பிரிவு - 2**

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு ஒரு <u>பத்தி அளவில்</u> விடை தருக. (5x3=15)**

1. செய்யுளில் வரும் சொற்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. பாட்டியல் இலக்கணம் எதைப் பற்றிக் கூறுகிறது?
3. வன்றொடர், மென்றொடர்க் குற்றியலுகரங்களை விளக்குக.
4. தமிழில் மெய்யெழுத்துகளின் வரிசை முறையில் (நெடுங்கணக்கில்) காணப்படும் நுட்பத்தை விளக்குக.
5. பண்புப்பெயர்ப் பகுதிக்கு நன்னூல் கூறும் சிறப்பு விதி யாது?
6. பொதுப்பெயர் என்றால் என்ன? சான்று தருக.
7. நடு, புது, பொது - இச்சொற்களுக்கு முன் வல்லினம் மிகுதலுக்குச் சான்று தருக.
8. பதத்தின் முன்னர் எவை எவை வந்து புணரும் போது இடையே சாரியை வரும்?

**பிரிவு – 3**

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக. (3x15=45)**

1. (அ) தொல்காப்பியமும் மற்றும் நன்னூலும் கூறும் சார்பெழுத்துகளை ஒப்பிட்டு கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) தமிழ் இலக்கண நூல்கள் குறித்து விளக்கி எழுதுக.

2. (அ) மெய்யெழுத்துகளின் பிறப்புப் பற்றித் தொல்காப்பியரும் நன்னூலாரும் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

(ஆ) புணர்ச்சி பற்றி நன்னூலார் வழி நின்று சான்று காட்டி விளக்குக.

3. (அ) எழுத்திலக்கணமும் புணர்ச்சியும் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) மெய்யின் முன்னர் உயிர்வந்து புணர்வது பற்றி நன்னூலார் கூறுவதைத் தொகுத்து வரைக.

✱ ✱ ✱